REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆனி 15உ சனி (29—6—57) ★ ★ வெளியூர்: ஆனி 16உ ஞாயிறு (30—6—57) [இதழ் 13

காப்பி நிலையங்கள் மூடப்படாது!

உதகை, ஜுன் 28—

ஜூலை 1-ந்தேதிமுதல் காப்பி நிலையங்களை மூடிவிடுவது என்ற தனது முன்னைய முடிவினை, காப்பி போர்டு ஒத்தி வைத்திருப்பதாகத் தெரிகிறது.

நிலையங்களை மூடினால், வேலையிலிருந்து நீக்கப்படும் தொழிலாளர்கள் பற்றிய சில சட்டவிவகாரங்களை ஆராய்வதற்காக, முடிவை அமுல் செய்யாமல் ஒத்திவைக்கிறார்களாம்!

சிக்கன நடவடிக்கைகள் செப்பிடுவித்தையே!

டெல்லி மந்திரிகளின் சொல் வேறு--செயல்வேறான போக்கு!

விளம்பர நோக்கம் தவிர வேறெதுவும் இல்லை!

அதிகாரிகளின் மனப்போக்கும் தெளிவாகிறது

புதுடில்லி, ஜுன் 28—

சிக்கனம் என்றுகூறி டில்லி சர்க்கார் மேற்கொள்ளுகிற நடவடிக்கைகள் எல்லாம் வெறும் 'செப்பிடு வித்தை'கள்தான் என்பது, வரவர தெளிவாகி வருகின்றனவாம்!

சர்க்காரின் சிக்கனப் பேச்சுக்கள், டில்லி சர்க்கார் அலுவலகத்தில் எந்தவித விளைவையும் உண்டுபண்ணவில்லையாம்!

சர்க்காரின் பிரச்சார இலாகாவினர், மேற்கொள்ளும் சிக்கன நடவடிக்கைகள்பற்றி துண்டுப் பிரசுரங்கள் வாரந்தோறும் வெளியிடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளனராம்; ஆனால், இவை குறித்து அதிகாரிகள் எவரும் கவலைப்படுவதாக இல்லையாம்!

மந்திரிகள் தாங்கள் பிரயாணம் செய்யும் கார்களில் பறக்கும் கொடிகளை அகற்றி விடுவது மட்டுமே பெரிய சிக்கனமாகி விடாது என்றும், சிக்கனம் பற்றிப் பேசிக்கொண்டே ஏராளமான பணம் வீண் விரயமாக்கப்படுகிறது என்றும் டில்லி பெரிய அதிகாரி ஒருவர் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறாராம்!

பண்டித பந்தின் மகன் திருமணத்திற்காக எல்லா மந்திரிகளும், அவர்களது உறவினர்களும், டில்லியிலிருந்து நைனிடால் சென்றுள்ளனர் என்ற செய்தி, சர்க்கார் அலுவலகத்தில் பெரும் பரபரப்பை ஊட்டியதாம்!

இலட்சுமண புரியிலிருந்து கடந்த வாரம் வந்த செய்தி ஒன்று, 'மந்திரிகள், சர்க்கார் அதிகாரிகளின் உபயோகத்திற்காக ரூ. 3 கோடி செலவில் கார்கள் வாங்கப்பட்டன' என்று தெரிவிக்கிறதாம்!

ஆறு இலட்சம் ரூபாய் செலவில் மக்கள் சபை உறுப்பினர்களின் விடுதிகள் புதுப்பிக்கப்படுவதற்கே காங்கிரசார்தான் காரணமாம்!

உத்திரப் பிரதேச சர்க்காரின் பெரிய அதிகாரிகள், தங்கள் உபயோகத்திற்கென வைத்திருக்கும் 2,000 கார்களை குறைத்துக்கொள்ள மறுத்துவிட்டதுபற்றியும் டில்லி சர்க்கார் அலுவலகத்தில் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறதாம்!

'மந்திரிகள் சிக்கனம்பற்றிப் பேசுவதெல்லாம் வெறும் விளம்பர நோக்குடைய செப்பிடு வித்தைகளே என்று சர்க்கார் அதிகாரிகளால் கருதப்படுகிறது' என்றும் கூறப்படுகிறது.

இந்தியத் தொழிலுக்கு மூலதனம் கிடைக்க ஏற்பாடாம்!

அந்நியக் கடன் வட்டிகளுக்கு வருமான வரி விலக்கு

புதுடில்லி, ஜுன் 28—

இந்தியத் தொழில்களுக்கு அந்நியப் பாங்கிகள் வழங்கும் கடன்களின் வட்டிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிப்பதென இந்திய சர்க்கார் முடிவு செய்துவிட்டதாகத் தெரியவருகிறது. அந்நிய முதலீடுகள் வருவதற்கும் இம்முடிவு வழிகோலுமாம்.

கடன் அல்லது இயந்திரங்களை அயல் நாடுகளிலிருந்து நியாயமான வட்டிக்குப் பெறவும் இந்தியத் தொழிலதிபர்களுக்கு இதன் மூலம் வாய்ப்பு ஏற்படுகிறதாம்.

தெரிந்துகொள்ளுங்கள்

புதுடில்லி, ஜுன் 28—

1057 ஜுன் 15-ந் தேதிவரை உள்நாட்டில் மொத்தம் 20·02 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது; இதே காலத்தில், தொழிற்சாலைகளில் மொத்தம் 12·01 டன் கையிருப்பில் இருந்தது.

ரூ. 50 இலட்சம் செலவில் புதிய மாளிகை!

சர்க்கார் திட்டத்திற்குக் கண்டனம்

'10-இலட்சம் பேர் பாதைகளில் வசிக்கும்போது புதிய மாளிகை ஏன்?'

கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கப் போவதாக. பம்பாய் நகரசபைத் தலைவர் அறிவிப்பு

பம்பாய், ஜுன் 28—

சர்க்கார் அலுவலகத்திற்கென புதிதாகக் கட்டிடம் கட்ட ரூ. 50 இலட்சம் ஒதுக்க பம்பாய் சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்!

'நகரத்தில் வீட்டுப் பிரச்சினை மிகக்கடுமையாக இருக்கும்போது சர்க்கார் அலுவலகத்திற்கென புதிய கட்டிடம் ஒன்று எழுப்ப உத்தேசிப்பது வருந்தத்தக்கதாகும்; எனவே, இதனை எதிர்த்து பம்பாய் நகர மக்கள் கிளர்ச்சி துவங்கினால் அதற்கு நானே தலைமை தாங்கி நடத்துவேன்' என்று பம்பாய் நகரசபை மேயர் எம். வி. டோண்டே, பம்பாய் மேல் (சட்ட) சபையில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

"நகரத்தில் மூன்றில் ஒரு பங்கு மக்கள்—சுமார் 10-இலட்சம் பேர் நடைபாதைகளில் வசிக்கிறார்கள்; இந்த மக்களுக்கு வீடில்லையே என்ற பெரும் பிரச்சினையின் முக்கியத்துவத்தை சர்க்கார் உணர்ந்ததாகக் காணோம்" என்றும் மேயர் கண்டனம் முழக்கி யிருக்கிறார்.

தமிழ் கட்டாயப் பாடமாக்கப்படும்

சென்னை மாகிலத்தில் உள்ள பள்ளிக்கூடங்களில் 'தமிழ்' கட்டாயமாகப் படித்தாக வேண்டும் என்று ஆட்சி மொழிக் குழு சிபாரிசு செய்துள்ளதாம்.

'இந்த யோசனையை சென்னை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அமுல் செய்யும்' என்று கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் சட்டசபையில் உறுதியளித்தார்.

சென்னை வரவு - செலவுத் திட்டம்

ரூ. 333·56 இலட்சம் துண்டு விழுகிறது

சென்னை, ஜுன் 29—

இன்று முற்பகல் 11-35 மணிக்கு நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் 1957—58-ம் ஆண்டிற்கான சென்னை மாநில வரவு-செலவுத் திட்டத்தை சட்டசபையில் தாக்கல் செய்தார்.

திட்டத்தில் 1957—58-ம் ஆண்டிற்கான வரவு ரூ. 5648·63 இலட்சமாகவும், செலவு ரூ 6132·19 இலட்சமாகவும் காட்டியிருக்கிறார்.

பற்றுக்குறையான ரூ. 483·56 இலட்சத்தை ஈடுசெய்ய இரண்டு முறைகளில் விற்பனை வரியில் மாற்றம் செய்து ரூ. 150 இலட்சம் பெறவும் சென்னை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதனால் பற்றுக்குறை ஏற்படுவது ரூ. 333 56 இலட்சமாகும்.

இப்பொழுது உணவுத் தானியங்களுக்கு (நெல், அரிசி, கோதுமை, மற்ற புஞ்சை தானியங்கள்) விதிக்கப்படும் விற்பனை வரியை குறைத்து, ஒரு சதவிகிதமாகவும், மற்ற பொருள்களுக்கு இரண்டு சதவிகிதமாகவும் வரி விதிக்க சென்னை அரசியலார் தீர்மானித்திருக்கிறார்கள்.

இம்மாற்றங்கள் நிகர விளைவாக ஒரு முழு ஆண்டில் ஒரு கோடியே எழுபது இலட்சம் ரூபாய் அதிக வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது. புத்தகங்கள் மீது விற்பனை வரியை நீக்கிவிட முடிவு செய்திருக்கிறார்கள்.

தோட்ட சொந்தக்காரர்களின் வருமானத்தின்மீது விதிக்கப்படும் விவசாய வருமான வரி விகிதம் உயர்த்தப்பட்டுள்ளது.

முதல் ரூ. 1,500-க்கு வரி இல்லை; அடுத்த ரூ 3,500-க்கு 5 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ரூ. 5,000-க்கு 10 சதவிகிதத்தை 15 - சத விகிதமாகவும், அடுத்த ரூ. 5,000-க்கு 15 சத விகிதத்தை 20 சதவிகிதமாகவும், அடுத்த ரூ. 5,000-க்கு 20-லிருந்து 25 சதவிகிதமாகவும், அடுத்த ரூ. 5000-க்கு 25-லிருந்து 30-க்கும், அதைவிட அதிக வருமானமுள்ள நிறுவனங்களின் மொத்த வருமானத்துக்கு 35-லிருந்து 45 சத விகிதமாக விவசாய வருமான வரியை உயர்த்தி, ஆண்டுக்கு ரூ. 25 இலட்சம் அதிக வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இரண்டு வரி மாற்றங்களாலும் ரூ. 1,50,00,000 அதிக வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, இறுதி பற்றுக்குறை ரூ. 3,33,00,000 என்று நிதியமைச்சர் தெரிவித்தார்.

'ஸ்ரீ-ஸ்ரீமதி ஆங்கில சொற்கள் அல்ல'

சென்னை கல்வி அமைச்சர் கண்டுபிடிப்பு

ஏ. வி. பி. ஆசைத்தம்பி யோசனை நிராகரிப்பு

தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கு நியமிக்கப்பட்ட குழு தனது முடிவுகளை அறிவிப்பதற்கு முன்னர், சென்னை கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள், இன்று சட்டசபையில், தனக்கு ஆங்கிலம் தெரியும் என்பதையும் வெளிப்படுத்திக் கொண்டார்.

அரசாங்கம் எழுதும் கடிதங்களில் இப்போது 'ஸ்ரீ—ஸ்ரீமதி' என்று, ஆண், பெண்பாலாருக்கு முறையே பயன்படுத்தப்பட்டுவருகிறது. இதைச் சுட்டிக்காட்டி சட்டசபையில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கல்வி அமைச்சரிடம் ஒரு நல்ல யோசனை கூறினார்.

"ஸ்ரீ—ஸ்ரீமதி என்ற சொற்களுக்கு மாறாக, 'திரு—திருமதி' என்ற தூய—எளிய—நல்ல தமிழ்ச் சொற்களை அரசாங்கம் பயன்படுத்தவேண்டும்" என்பதே அவர் கூறிய யோசனையாகும்.

தமிழ் முன்னேற்றத்தில் தனக்கும் அதிக அக்கறையுண்டு என்று பெருமை பேசிய கல்வி அமைச்சர், அந்த யோசனையை ஏற்க மறுத்து, 'ஸ்ரீ—ஸ்ரீமதி' என்ற சொற்களை உபயோகிப்பதில் தவறில்லை என்றும், அவை ஆங்கிலப் 'பதங்கள்' (சொற்கள்) அல்லவென்றும் கூறி, யோசனையை நிராகரித்தார்.

விலைவாசிகள் உயர்வை எதிர்த்து மேற்கு வங்க சட்டசபைமுன் ஆர்ப்பாட்டம்

கல்கத்தா, ஜுன் 27—

உணவுப் பொருள் விலை ஏற்றத்தைக் கண்டித்து மேற்கு வங்க சட்ட சபைமுன் கூடி சுமார் ஆயிரம் பேர் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

விலை ஏற்றம், மற்றும் பஞ்சத் தடுப்புக் கமிட்டியினர் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தி வைத்திருக்கின்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் முதலில் கூட்டம் ஒன்று நடத்தினர்; அதில் பி. சோ. தலைவரான டாக்டர் எஸ். சி. பானர்ஜி, மற்றும் பலர் பேசினர்.

சர்க்கார், உணவுப் பொருள் விலை ஏற்றத்தைத் தடுக்கத் தவறிவிட்டதாக அவர்கள் குற்றம் சாட்டினர்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 29—6—57 சனி

மூன்றே திங்களில்!

உணவுப் பண்டங்களின் விலை உயர்வை ஆராய்வதற்காக அசோக்மேத்தா அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்றை நியமித்திருக்கின்றது இந்தியப்பேரரசு. எதிர்காலத்தில் அரசாங்கம் நிர்ணயிக்க வேண்டிய உணவுப் பண்டங்களின் விலைகுறித்து அரசாங்கத்திற்கு உருவான கருத்தறிவிப்பதும் மேற்படி குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி குழு நியமனத்தைக் கண்டு, பலர் பலவிதமான கருத்து கொள்வது எதிர்பார்க்கக்கூடியதே. அரசாங்க சார்பில் இதுவரை உணவுப் பண்டங்களின் விலை உயர்வுக்கான காரணம் குறித்து, முன்னுக்குப்பின் முரண்பட், விதவிதமாகக் கூறப்பட்டுவந்த சமாதானங்கள் அனைத்தும், உறுதிப்பாடு இல்லாமல் அரசாங்கத்தால் கூறப்பட்டு வந்திருக்கின்றது எனக் கருதுவதும் ஒன்றுகும் என்பதில் ஐயமில்லை.

மேற்படி குழுவை நியமிப்பதற்கு முன் குறிப்பிடப்பட்டதுபோல், உணவுப் பண்டங்களின் விலை உயர்வுக்கான காரணங்களை கண்டறிந்து அறிவிப்பதுடன், அக்குழுவின் பணி முடிந்துவிடுவதாக இல்லை. மேலும் சில பொறுப்புகளையும் அக்குழுவிடம் இந்தியப் பேரரசு இப்பொழுது ஒப்படைத்திருக்கின்றது.

அடுத்த சில ஆண்டுகளில் உணவுப் பண்டங்களின் தேவை என்னவாக இருக்கக்கூடும்? அத்துறையில் நிறைவு பெறுவதற்கான வழிவகைகள் யாவை? உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஊக்கத்தை விவசாயிகளுக்கு ஊட்டும் வகையில் எந்த அளவில் விலை நிர்ணயம் செய்வது? அதே நேரத்தில் உணவுப் பண்டங்களைப் பயன்படுத்தும் பெருவாரியான பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையில் விலையை வரையறுப்பது எப்படி? என்பனபோன்ற இனம் பற்றி எல்லாம் ஆராய்ந்து கருத்தறிவிக்கும் பொறுப்பு, மேத்தா குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வளவு பணிகளையும் மூன்றே திங்களில் மேற்படி குழு செய்து முடித்தாக வேண்டும் என்றும் கட்டளை போட்டிருக்கின்றது இந்தியப் பேரரசு.

அசோக் மேத்தாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளோ முக்கியமானது. பொதுமக்கள் அனைவரையும் கண்டிப்பாகப் பாதிக்கக்கூடியது. அதுவுமன்றி ஒருநாட்டின்பொருளாதார நடவடிக்கைகளுக்கெல்லாம் மூலமானதுமாகும். அத்தகு முக்கியமான ஒரு பிரச்சினையை ஆராய்ந்து அறிந்து பரிகாரத்திற்கான வழிவகைகளை மூன்று திங்களுக்குள் கூறிவிடவேண்டும் என, மேற்படி குழுவிற்கு இந்தியப் பேரரசு கட்டளையிட்டிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது.

அடுத்த சில ஆண்டுகளில் பெருகக்கூடிய மக்கள் தொகையை உத்தேசமாக மதிப்பிட்டு, உள்நாட்டு உணவுப் பண்டங்களின் உற்பத்தியையும் குறைந்த பட்சமாகக் கணக்கிட்டு, இறக்குமதி செய்ய வேண்டிய தானிய அளவை திட்டவட்டமாக மேத்தா குழுவால் அறிவித்து விடுவது சாத்தியமாகும். இத்திருப்பணியைத்தான் இந்தியப் பேரரசில் இடம் பெற்றுள்ள உணவு அமைச்சுத் துறை இப்பொழுதும் செய்து வருகிறது.

உயர்ந்தபட்ச விலையை உணவுப் பண்டங்களுக்கு நிர்ணயித்து விடுவதால் மட்டும் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்கமூட்டிவிட முடியாது. இப்பொழுதும் உணவுப் பொருட்களின் விலை உயர்ந்துதான் இருக்கின்றது. விலை உயர்ந்து இருக்கின்ற காரணத்தினுல்மட்டும் உணவுப் பண்டங்களின் உற்பத்தி கூடுவதாக இருக்குமானுல், இதுவரை உற்பத்தி இயல்பாகப் பெருகி இருக்கவேண்டும். ஆனுல், உற்பத்தியோ பெருகவில்லை. அதன் பலனுகத்தான் மேத்தா குழு உயிர் பெற்று இருக்கின்றது என்பது சிந்திக்கத்தக்கது.

நியாய விலைக் கடைகள் திறந்து, இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பண்டங்களை விற்க ஏற்பாடு செய்வதின் மூலம், உள்நாட்டு உணவுப் பண்டங்களின் விலையைக் கணிசமாகக் குறைத்துவிட முடியுமா என்றுல், அதுவும் முடியாது என்பது மெய்ப்பிக்கப்பட்டாகி விட்டது. நியாய விலைக் கடைகளினுல் ஓரளவு ஏழை மக்களின் உணவு நெருக்கடி தவிர்க்கப்பட்டது என்றுலும், உணவுப் பண்டங்களின், ஏறிய விலையை இறக்குவதில் அம்முயற்சி முழு தோல்வி கண்டுவிட்டது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

பொதுமக்கள் எதிர்பார்ப்பது எல்லாம் தங்களால் வாங்கி அரை வயிருவது உண்ணக்கூடிய நிலையில் உணவுப் பண்டங்களின் விலை இருக்கவேண்டும் என்பதேயாகும். அந்த ஒன்றைத்தான் காங்கிரசு ஆளவந்தார்களிடம் பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஏற்கனவே எதிர்பார்த்ததும் அதுவேதான். இதுவரை மக்கள் எதிர்பார்த்தபடி, இத்துறையில் காங்கிரசு ஆளவந்தார்களால் எதையும் குறிப்பிடத்தகுந்த வகையில் சாதிக்க முடியவில்லை. காங்கிரசு ஆளவந்தார்களின் இத்தோல்வியை வெற்றியாக்கும் வகையில் மேத்தா குழு, தக்க பரிகாரம் கண்டு கூறுமானுல், அது ஒன்றே போதுமானதாகும்.

காங்கிரசு அல்லாத எதிர்க் கட்சிக்காரர் ஒருவர் தலைமையில், அதிலும் உணவு நெருக்கடிக்குப் பரிகாரம்கூறும் பணிக்காக ஒரு குழுவை நியமிக்க காங்கிரசு ஆளவந்தார்கள் முன் வந்திருப்பது இதுவே முதல் முறையாகும். இதில் ஏதாவது அரசியல் காரணம் இருந்தாலும் இருக்கக்கூடும் என்பதில் ஐயமில்லை.

அதாவது, உணவுப் பிரச்சினையில் காங்கிரசு ஆளவந்தார்கள் பெற்று வந்துள்ள தோல்வி மேல் தோல்வியை எதிர்க் கட்சியினர்தான் கடுமையாகத் தாக்கி வருகின்றனர். எதிர்க் கட்சியினர் வாயை மூடவேண்டுமானுல், எதிர்க் கட்சியைச் சேர்ந்தஒருவர் தலைமையிலேயே குழு ஒன்றை நியமித்து பரிகாரம் கூறச் சொல்லவேண்டும் எனக் கருதி காங்கிரசு ஆளவந்தார்கள் மேத்தா குழுவை நியமித்து இருந்தாலும் இருக்கக்கூடும்.

மேத்தா குழுவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த எவரும் இடம் பெற்றிருக்க வில்லை. இந்தியப் பேரரசின் உளப்பாங்கைத் தெளிவாகத் தெரிந்துள்ள நமக்கு இது ஆச்சரியத்தையும் அளிக்கவில்லை— அதிர்ச்சியையும் ஊட்டவில்லை.

முதல் ஐந்தாண்டுத் திட்டம்:

ஒதுக்கப்பட்ட தொகை முழுதும் செலவிடப்படவில்லையாம்!

எல்லாத் துறைகளும் இதற்குப் பொறுப்பாம்!

திட்டக் குழு கண்கலங்குகிறது

புதுடில்லி, சூன் 28—

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், 1951 முதல் 1956 வரை செலவிடுவதென திட்டமிட்டு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 2,354·68 கோடி; ஆனுல், இதில் செலவு செய்யப்பட்டதோ ரூ. 1988·26 கோடிதான் என்று, இப்போது கணக்கிடப்பட்டிருக்கிறதாம்!

ஒதுக்கப்பட்ட தொகையில் சுமார் ரூ. 366·42 கோடி வரை செலவிடப்படாமல் விடப்பட்டதுகண்டு, திட்டக்குழு கண்கலங்குகிறதாம்!

விவசாயம் மற்றும் சமூக நல அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் ரூ. 59 கோடிவரை செலவிடப்படவில்லையாம்!

கூட்டுறவு, நீர்ப்பாசனம், மின்சாரம், சேவை, தொழில், சுகாதாரம், கல்வி, மற்றும் போக்குவரத்து துறைகளில் எல்லாம் ஒதுக்கப்பட்ட அளவு தொகைகள் செலவிடப்பட வில்லை என்றும் திட்டக் குழுவிற்குத் தெரிய வந்துள்ளதாம்.

சோஷலிஸ்டுகள் ஆர்ப்பாட்டம்

ஜூலை 11-ந் தேதி நடைபெறும்

வரும் சூலை 11-ந் தேதியன்று சோஷலிஸ்டுக் கட்சியினர், சர்க்கார் அலுவலகங்களின் முன்னுல் ஆர்ப்பாட்டங்கள் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

அக்கிரமமான வரி விதிப்புக்கும் அடக்குமுறைக்கும் கருவிகளாயிருக்கிற மாவட்ட கலெக்டர் அலுவலகம், ரெவினியூ டிவிஷனல் அலுவலகம், தாலுகா அலுவலகம் ஆகியவை முன் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுமாம்.

வாழ்க்கைத்தரப் புள்ளி

சென்னை, சூன் 29—

சென்னை நகர தொழிலாளர் வாழ்க்கைத்தரப் புள்ளி 8-ந் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 373 ஆக இருந்தது; முன்னைய வாரத்தைவிட இது 5 புள்ளி அதிகம். காய்கறி,மீன், இறைச்சி இவற்றின் விலையேற்றமே புள்ளி அதிகரிப்புக்குக் காரணம்.

வேலையில்லாத் திண்டாட்டக் கொடுமை நீங்க!

'முதல் திட்டம் கிஞ்சிற்றும் பயன்படவில்லை'

திட்டக் குழுவின் ஒப்புதல்

புதுடில்லி, சூன் 28—

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு முதல் ஐந்தாண்டுத் திட்டக் குழுவின் அறிக்கைமூலம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

'வேலை தேடுவோரின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே இருந்த நிலையில், முதல் திட்டத்தில் வேலை வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே இருந்தன' என்று திட்டக் குழு அறிக்கை கூறியுள்ளது.

"எனவே, முதல் திட்ட காலத்தில் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டமும், பற்றுக்குறை வேலையும் குறிப்பிடக் கூடிய அளவுக்குக் குறையவில்லை; காரணம், இந்தப் பிரச்சினை, நாட்டின் பொருளாதாரத்தை மூலமாகக் கோண்டது" என்றும் குழு கூறியுள்ளது.

அரியலூர் இரயில் விபத்து நஷ்டஈடு

20 சத விகிதம் அதிகரிக்கிறது

திருச்சி, சூன் 28—

அரியலூர் இரயில் விபத்தில் உயிரிழந்த - காயமடைந்தவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு நஷ்டஈடு கமிஷனர் வழங்கிய நஷ்டஈடு தொகைக்கும் அதிகமாக 20 சத விகிதம் அளிக்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளதாம்.

கல்லூரிப் படிப்பில் புதியதோர் பாடம்!

புதுடில்லி, சூன் 28—

சமுதாய நல அபிவிருத்தி வேலையில் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், மற்றும் உயர்தரக் கல்வி நிறுவனங்களுக்கு அக்கறை ஏற்படச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

சமுதாய நல அபிவிருத்தி பற்றி குறுகிய காலப் படிப்புத் திட்டமொன்றை தங்களது பாடத் திட்டத்தில் சேர்ப்பதற்கு அதிகாரிகளை இணங்கச் செய்வது இந்நடவடிக்கைகளில் ஒன்றுகும்.

உங்களுக்குத் தெரியுமா?

1956-ம் ஆண்டில், வெளிநாடுகளிலிருந்து மொத்தம் 75,550 உல்லாசப் பிரயாணிகள் இந்தியாவுக்கு வருகை தந்தனர். இதற்கு முந்திய ஆண்டுகளில் வந்தவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் இது மிகவும் அதிகமாகும். அன்றியும், பாகிஸ்தானிலிருந்து 2,75,877 பேர் 'சி' விசாக்கள் பெற்றுவந்தனராம்.

வடக்கில் உருவாகும் உருக்குத் தொழிற்சாலைக்காக!

ரூ. 6,38,00,000 செலவில் மற்றொரு திட்டம்

புதுடில்லி, சூன் 28—

பிலாயிலும், ரூர்க்கேலாவுக்கு அருகிலும் உருக்குத் தொழிற்சாலைகளின் உபயோகத்திற்காக ரூ. 6,38,00,000 செலவில் புதிதாக இரண்டு இரயில்வே மார்ஷலிங் யார்டுகள் அமைக்கப்படவிருக்கின்றன.

இந்தியாவில் தொழில்துறை தகராறு

அதிக அளவில் உள்ளதாம்

1957 ஏப்ரல் மாதத்தில், தொழில்துறைத் தகராறுகள் காரணமாக, 3,53,245 நபர்—நாட்கள் நஷ்டமாயின. முந்திய மாதத்தில் ஏற்பட்ட நஷ்டத்தைக் காட்டிலும் இது அதிகமாகும்.

இம்மாதத்தில் 144 தகராறுகள் நீடித்துவந்தன. மார்ச் மாதத்தில் நீடித்துவந்த தகராறுகளின் மொத்தஎண்ணிக்கை 116.

பதினுறு தகராறுகள் கதவடைப்புகள் காரணமாக ஏற்பட்டவை ஆகும்; இவற்றில் மொத்தம் 17,636 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

இம்மாதத்தில் 115 தகராறுகள் முடிவுற்றன; 22 தகராறுகள் 'கூலிகள், படித் தொகைகள்' பற்றியும், 14 தகராறுகள் 'போனஸ்' பற்றியும், 39 தகராறுகள் 'சிப்பந்திகளின் குறைகள்' பற்றியும் இருந்தன.

வடக்கில் உருவாகும் உருக்குத்தொழிற்சாலை

திட்டமிடப்படும் இட்வசதிகள் பற்றி ஒரு கண்ணேட்டம்

புதுடில்லி, சூன் 27—

தர்காபூர் உருக்குத் தொழிற்சாலைத் திட்டத்திற்காக மேலும் 539.7 ஏக்கர் நிலமும், குடியிருப்புக்காக 808·3 ஏக்கர் நிலமும் வாங்கப்பட்டுள்ளன.

தொழிற்சாலையும், தொழிலாளர் குடியிருப்பும் முறையே 5552·08 ஏக்காராவிலும் 8986 52 ஏக்காராவிலும் அமைக்கப்படும்.

இதற்காக வாங்கப்பட்டுள்ள நிலத்தின் பரப்பளவு தொழிற்சாலைக்கு 4800·805 ஏக்கரா; குடியிருப்பு நகருக்கு 7390·382 ஏக்கரா.

தர்காபூர் தொழிற்சாலை 1959 இறுதியில் உற்பத்தித் துவங்கும்; 10 இலட்சம் டன் இரும்புக்கட்டி உற்பத்தி செய்யும் வசதி அங்கு உண்டு; 13 இலட்சம் டன் உற்பத்தி செய்யக்கூடிய அளவில் அதை விரிவாக்கலாம்; இறுதியாக 25 இலட்சம் டன் வரை உற்பத்தி செய்வதற்கு அதிக இயந்திர சாதனங்களை அமைக்க அங்கு இடவசதி இருக்கிறது.

துவக்கத்தில் 7,500 என்சினீயர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடவசதி அளிக்கப்படுகிறது. பிறகு 20,000குடும்பங்களைக் குடியேற்றுவதற்கு கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

தமிழுக்கு உரிய இடம் தர அகில இந்திய வானொலி மறுப்பு

அநீதி குறித்து தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் கண்டனத் தீர்மானம்

அனுமதிக்க மறுத்த தலைவரின் போக்கால் குழப்பம்

விவகாரம் குறித்து ஆராய குழு நியமனம்

சென்னை, ஜூன் 25—

அகில இந்திய வானொலியில், தமிழுக்கு உரித்தான இடம் மறுக்கப்படுவதாக — ஓரவஞ்சகம் காட்டப்படுவதாகக் கொண்டுவரப்பட்ட ஒரு தீர்மானத்தை தலைவர் ஏ. ஜி. வெங்கடாச்சாரி அனுமதிக்க மறுத்ததால், தமிழ் எழுத்தாளர்கள் மாநாட்டில் சிறிது நேரம் கூச்சலும்—குழப்பமும் நிலவியது! பின்னர் ம.பொ.சி. தலையீட்டால் மீண்டும் அமைதி ஏற்பட்டது.

அகில இந்திய வானொலியின் நிகழ்ச்சிகளில் தமிழுக்கு உரிய இடம் நியாயமாக வழங்கப்படாமல் பாரபட்சம் காட்டப்படுவதாகக்கூறி, அதைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்று தமிழ் எழுத்தாளர் சங்க மாநாட்டில் ஆர்.வி. ஜெயகாந்தன் என்பவர் கொண்டு வந்தார். ஆனால் மாநாட்டுத் தலைவர் அதை அனுமதிக்கவில்லை. என்றாலும், அதுபற்றிய உண்மைகளை ஆராய்ந்தறிந்து, தமிழ் புறக்கணிக்கப்படுகிறது என்று தெரிந்தால், தக்க நடவடிக்கை எடுப்பது என்று மாநாடு முடிவு செய்தது.

இப்பிரச்சினை பற்றி ஆராயவும் உண்மைத் தகவல்களைச் சேரிக்கவும் செயற்குழு ஒன்றும் மாநாட்டினரால் நியமிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் சபைத் தலைவர் ஏ. ஜி. வெங்கடாச்சாரி இத்தீர்மானத்தை அனுமதிப்பதற்கு இல்லையென்று கூறினார். இதைத் தொடர்ந்து மாநாட்டில் சிறிது நேரம் கூச்சலும் குழப்பமும் நிலவியது.

வானொலி நிலையத்தினரின் போக்கை கண்டிக்கும் இத்தீர்மானத்தில் 28 பிரதிநிதிகள் கையொப்பமிட்டிருந்தனர்.

தங்கள் தீர்மானம் நிராகரிக்கப்பட்டதை அறிந்த இவர்களில் பலர் பல திக்குகளிலிருந்தும் எதிர்ப்புக் குரல்கள் கிளப்பினர்; சில நிமிடங்களுக்கெல்லாம் இவர்களில் சிலர் மேடைக்கே சென்று விட்டனர்.

வானொலி நிலையத்தாரின் ஒரு தலைப்பட்சப் போக்கை ஆதாரங்களுடன் விளக்கமுடியும் என்றும், அது பற்றிப் பேச அனுமதிக்குமாறும் அவர்கள் தலைவரிடம் கேட்டனர்.

நிலைமையைக் கவனித்துக் கொண்டிருந்த ம. பொ. சிவஞானம் எழுந்து, ஒலிபெருக்கி அருகேவந்து, இந்தத் தீர்மானத்தை இப்போது வற்புறுத்தாமல் விடலாம் என்றும், ஆனால் இதுபற்றி நன்கு ஆராய்ந்து அறிந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பொருட்டு ஒரு கமிட்டியை நியமிக்கலாம் என்றும் யோசனை கூறினார்.

மாநாட்டினர் இந்த யோசனையை ஏற்றுக்கொண்டனர்.

அதன்பின் சபைத் தலைவர் திரு. கி. வா. ஜகன்னாதன், திரு. அழ. வள்ளியப்பா, திரு. ம. பொ. சிவஞானம், திரு. ஜெயகாந்தன் ஆகியோரைக் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டது என்றும் தெரிகிறது.

★

கி.ஆ.பெ. விசுவநாதம் கண்டனம்

"தமிழ் நாடகப் பேராசிரியரைப் பாராட்டுகிறோம்; கேடயம் வழங்கி கௌரவிக்கிறோம்; ஆனால், நேற்று வானொலியில் நடைபெற்ற அகில இந்திய நாடக விழாவில் ஒரு நாடகம் கூட ஒலிபரப்பப்படவில்லை, இந்த நிலை கண்டு தமிழ் எழுத்தாளர் வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது.

"தமிழ் நாட்டில் வானொலி நிலையம் உள்ளது. ஆனால் அங்கு தமிழுக்கு உரிய இடம், முழு இடம் இல்லை. இந்த இழிநிலை மாற வேண்டும்; தமிழுக்கே உரியதாக சென்னை வானொலி நிலையம் விளங்க வேண்டும். இப்போதுள்ள இழிநிலை நீங்கும் வரையில் நான் வானொலியில் பேசமறுத்துள்ளேன்"

என்று, நாடகப் பேராசிரியர் சம்பந்த முதலியாரைப் பாராட்டிப் பேசும்போது, தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் தோழர் கி. ஆ. பெ. விசுநாதம் கூறினார்.

★

'தமிழ்நாடு என்று பெயரிடு'

சென்னை மாநிலத்திற்கு தமிழ் நாடு எனப் பெயரிடுமாறு மாநில சர்க்காரைக் கேட்டுக்கொண்டு, தமிழ் எழுத்தாளர்கள் மாநாடு தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகத் தெரிகிறது.

★

நாவலரும், நாடகப் பேராசிரியரும் கௌரவிக்கப்பட்டனர்

செந்தமிழ் நாவலரான டாக்டர் சோமசுந்தர பாரதியாரும், நாடகப் பேராசிரியரான பம்பல் சம்பந்த முதலியாரும், தமிழ் எழுத்தாளர் சங்க மாநாட்டில் கேடயங்கள் வழங்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் இருவரும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள அருந்தொண்டினை மனமாரப் பாராட்டிப் பலரும் பேசினர்.

★

பரிசுகள் பெற்ற திராவிட பெரியார்கள்

எழுத்தாளர் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி (23—6—57) அன்று, திராவிட மொழிகளான தெலுங்கிலும் - மலையாளத்திலும், தமிழ் இலக்கியங்களை மொழி பெயர்த்த இரு பெரியார்களுக்குப் பாராட்டுப் பரிசுகள் (பதக்கங்கள்) வழங்கப்பட்டன.

பரிசுகள் பெற்ற பெரியார்களில் ஒருவரான திரு.ஸ்ரீராமுலு ரெட்டியார் என்பார், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்ப ராமாயணம் ஆகிய பெரும் நூல்களை தெலுங்கில் கவிதை உருவில் மொழி பெயர்த்துள்ளார்; மற்றொரு பெரியாரான - 92 ஆண்டுகள் நிரம்பப் பெற்ற திரு. நாராயணன் நாயர் என்பார், தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தை, ஏற்கெனவே மலையாள மொழியில் மொழி பெயர்த்துள்ளார்; தற்போது திருக்குறளை மொழிபெயர்க்கும் பெரும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

தமிழ் எழுத்தாளர்கள் சார்பில் பரிசுகள் வழங்கி பெருமைப்படுத்தியவர், கன்னடப் பெரியாரான - சென்னை சட்ட மன்றத் தலைவர் திரு. யூ. கிருட்டினராவ் அவர்கள் ஆவார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண் : 7/57

ஜூலை-7 ஞாயிறு

பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிடும் நாள்

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாழும் ஊர்களைச் சார்ந்த தி. மு. க. கிளைத் தோழர்களும், ஆதரவாளர்களும், **7-7-57** ஞாயிற்றுக் கிழமையைப் பாராளுமன்ற உறுப்பினரிடம் புதிய வரி விதிப்புப்பற்றி முறையிடும் நாளாகக் கொண்டு, அன்று அந்தந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊர்களில் பொதுமக்களுடன் ஊர்வலமாகப் பாராளுமன்ற உறுப்பினர் இருக்கும் இல்லத்திற்குச் சென்று, முறையீட்டின் நகலை அவரிடம் கொடுத்துவிட்டு, உடன் பொதுக்கூட்டத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி விளக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம். பாராளுமன்ற உறுப்பினர் இல்லத்திலோ அல்லது ஊரிலோ இல்லாவிட்டால், அவர்கள் இல்லத்திலுள்ள வேறு முக்கியமானவரிடம் முறையீட்டின் நகலைக் கொடுத்து உரியவரிடம் சேர்ப்பிக்குமாறு கூறக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்திய அரசியலார் விதித்திருக்கும் புதிய வரிகளையும், கட்டண உயர்வுகளையும் பொதுமக்கள் விரும்பவில்லை—எதிர்க்கிறார்கள் என்பதையும், பாராளுமன்றம் சென்றுள்ள உறுப்பினர்கள் அவற்றை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் போராடவும், வாக்களிக்கவும் வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகிறார்கள் என்பதையும் பொதுக்கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றவும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊரில் மட்டும் இந்த ஏற்பாடுகளைச் செய்தால் போதும். அந்தந்தப் பாராளுமன்றத் தொகுதியிலுள்ள தோழர்கள் அந்தந்தத் தொகுதிக் கூட்டத்தில் கலந்துகொள்ள முயற்சி எடுக்கவும்.

கட்டுப்பாடுடன், அமைதி குலையாத வகையில் ஊர்வலங்களையும் பொதுக்கூட்டங்களையும் நடத்தவும்.

ஊர்வலத்தின் மூலம் முறையிட வருவதை முன்கூட்டியே அந்தந்தப் பாராளுமன்ற உறுப்பினருக்குப் பணிவன்போடு தெரிவித்துவிடவும்.

21—6—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

'ஐந்தாண்டுத் திட்டத்தில் கேரளத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை போதுமானதல்ல'

'இரண்டாவது கப்பல்தொழிற்சாலை எங்கள் மாநிலத்திற்கு வேண்டும்'

கேரள காங்கிரஸ் கோரிக்கை எழுப்புகிறது

"கேரளத்திற்கு இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதுமானதல்ல; அதுவும் குறிப்பாக மலபார், திரு-கொச்சியோடு ஒப்பிடும்போது மிகவும் பின்தங்கிய பிரதேசமாகும். இந்த நிலையில், திரு-கொச்சிக்கு ரூ. 68 கோடியும், மலபாருக்கு ரூ. 19 கோடியும் ஒதுக்கப்பட்டிருப்பது மிக மிகக் குறைவானதாகும்; எனவே, மலபாருக்கு நியாயமாக ரூ. 45 கோடி கிடைத்தாக வேண்டும் "

என்று கேரள பிரதேச காங்கிரஸ் செயற்குழு ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

எர்ணாகுளத்தில் மாதவமேனனின் தலைமையில் நடைபெற்ற அந்தச் செயற்குழு, 'உத்தேசிக்கப்பட்டுள்ள இரண்டாவது கப்பல் கட்டும் தொழிற்சாலை கேரளத்தில் அமைக்கப்பட வேண்டும்' என்று கோரியும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

கேரளத்திற்கு நீண்ட கடற்கரை இருப்பதோடு, கேரள மக்களுக்குக் கப்பல் கட்டுவது ஒரு பாரம்பரியமான தொழில் என்றும், மேலும், கேரளத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் மிகக் கடுமையாக இருப்பதால் மாநிலத்தில் பெரும் தொழில்கள் நிறுவப்பட வேண்டியது கட்டாயமான அவசியமாகிறது என்றும் சுட்டிக்காட்டி, டெல்லி சர்க்கார் உத்தேச கப்பல் தொழிற்சாலையை கேரளத்திலேயே நிறுவ வேண்டும்' என்று கேட்டிருக்கிறது.

சென்னை நகரசபைக்கு டி. டி. கே. கைவிரிப்பு

திட்டக்குழு மீது பொறுப்பு சுமத்தப்படுகிறது

தண்ணீர், சாக்கடை, ஒளி வசதி, குழந்தைகள் நலத் திட்டங்கள், சாலைகள் பராமரிப்பு, பாலங்கள், சேரி சீர்திருத்தம், குடியிருப்பு முதலிய பல்வேறு திட்டங்களுக்காக மத்திய அரசாங்கத்தின் கடன் உதவியும், மானியமும் கோரி, சென்னை நகரசபை மேயர் மத்திய நிதி அமைச்சரை டில்லியில் கலந்துபேசியுள்ளார்.

தமக்கும் இதில் அக்கறை உண்டென்றும், ஆனால் திட்டக்குழு இவைகளைக் கவனிக்க வேண்டியுள்ளது என்றும் நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியுள்ளார்.

குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்திற்கும், சேரிகள் ஒழிப்பு வேலைக்கும் நகரசபைகளுக்கு உதவியை விரைவில் தருமாறு மாநில சர்க்காரை தாம் வற்புறுத்துவதாக அவர் உறுதி கூறினாராம்!

சென்னையில் உள்ள 311 சேரிகளுக்கு 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இந்திய அரசாங்கத்திடம் ரூ. 2 கோடி கடனாகவும், ரூ. 1 கோடி மானியமாகவும் சென்னை நகரசபை இந்தியப் பேரரசிடம் கோரியிருந்தது.

ஆனால் சென்னைக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 168 இலட்சமேயாகும். இதில் நகர சபைக்கு ரூ. 112 இலட்சமும், நகர அபிவிருத்தி நிலையத்திற்கு ரூ. 56 இலட்சமும் பகிர்ந்து தரப்படுமாம்.

பாகிஸ்தான் பிரதமர் அச்சமுறுகிறார் ?

நீர்ப்பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்காதாம்

இந்தியா — பாகிஸ்தான் கால்வாய்த் தண்ணீர் தகராறின் முடிவுக்கு 1954-ம் ஆண்டில் உலக பாங்கி தெரிவித்த திட்டத்தை, பாகிஸ்தான் பிரதமர் நிராகரித்து விட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

சிந்துநதித் திட்டத்தில் மூன்று கிழக்கு நதிகளைத் இந்தியாவுக்கும் மூன்று மேற்கு நதிகளை பாகிஸ்தானுக்கும் ஒதுக்குவதே அத்திட்டமாகும்.

லண்டனில், இந்நிராகரிப்பு பற்றி பாகிஸ்தான் பிரதமர் கூறியிருப்பதாவது :

"சரித்திர பூர்வமாக எங்களால் உபயோகிக்கப்பட்டுவந்த தண்ணீர் இப்போதும் எங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றதான் சட்டமாகும்; மூன்று மேற்கு நதிகளின் தண்ணீரைக்கொண்டு எங்களுடைய பாசனத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள இயலுமா? அதற்குத் தேவையான தண்ணீர் அந்த நதிகளில் இருக்கின்றனவா? நாங்கள் ஒரு முடிவுக்கு வருமுன்பு நீர்ப்பாசன நிபுணர்களிடமிருந்து இதற்குப் பதில் கிடைக்க வேண்டும் "

மேட்டூர் கால்வாய்கள் திறக்கப்படுமாம்

45,000 ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதி பெறும்

மேட்டூர் கால்வாய் திட்டத்தின் வலது - இடதுகரைக் கால்வாய்களை ஆகஸ்டு 1-ந் தேதியிலிருந்து டிச. 15-ந் தேதி வரை பாசனத்திற்குத் திறந்துவிட நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

கோவை, சேலம் மாவட்டங்களிலுள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு இக்கால்வாய்கள் தண்ணீர் விநியோகிக்கும்.

வலதுகரைக் கால்வாய் 18,000 ஏக்கருக்கும், இடது கரைக் கால்வாய் 27,000 ஏக்கருக்கும் பாசன வசதியளிக்குமாம்.

வீதிகளின்பெயரை மாற்ற டாக்டர் சேது யோசனை

நெல்லை, ஜூன் 23—

"நெல்லையம்பதி தமிழ்ப் பற்றுக்குப் பெயர் பெற்ற இடம்; எனவே, நெல்லை நகரில் உள்ள சில வீதிகளின் பெயர்களை மாற்றி, அவைகளுக்குச் சரியான பெயர்களை வைக்க வேண்டும்,"

என்று, டாக்டர் இரா. பி. சேது (பிள்ளை) அவர்கள், நெல்லை நகர மன்றச் சார்பில் நடைபெறும் 8-வது தேசியப் பொருட்காட்சி சுகாதார விழாவை திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொழில் நிலையங்களில் 'ஆபாச' படங்களா ?

முடிதிருத்துவோர் சங்க முடிவு

குன்றத்தூர், ஜூன் 26—

குன்றத்தூர் வட்டார சவரத் தொழிலாளர் சங்கப் பொதுக் கூட்டம், சங்கக் கட்டிடத்தில், 25—6—57 காலை 10 மணிக்கு, தோழர் என். சிவானந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் டி. எம். கணபதி, வி. கைலாசம் ஆகியோர் பேசிய பின்பு குன்றத்தூரிலுள்ள 'சலூன்'களிலே அருவெறுக்கத் தக்க படங்களை வைப்பதில்லை என்றும், மற்றும் பல முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை சட்டசபையில் கேள்வி நேரம்:

கோவையில் பல்கலைக் கழகம் ஏற்படுமா?

அரசாங்கம் உடனடியாக செயல்பட வேண்டுமென அன்பழகன் வற்புறுத்தல்

சென்னை, ஜுன் 28—

ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் தேர்வு பெற்று கல்லூரி படிப்புப் பயில விரும்பியும், போதிய கல்லூரிகள் இல்லாத காரணத்தால் அவர்களுக்குக் கல்லூரிகளில் இடம் கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கும் இந்த நேரத்தில், கோவையில் ஒரு பல்கலைக் கழகம் துவங்க சில பிரமுகர்கள் சென்னை அரசாங்கத்தின் அனுமதியைக் கோரியிருந்தனராம்; ஆனால் அந்தப் பிரமுகர்கள் ஆர்வத்துடன் முன்வந்ததை இதுவரை சென்னை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளவில்லையாம்.

கோவையில் பல்கலைக் கழகம் ஏற்படுத்த அனுமதி தருவது பற்றி அரசாங்கம் இன்னும் முடிவு செய்யவில்லை' என்று கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் சட்டசபையில் தெரிவித்தார்.

கோவையில் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவது பற்றி சென்னை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறதாம்.

"கோவையில் பல்கலைக் கழகம் ஏற்படுத்தினால் தமிழில் போதனை தருவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதால். பல்கலைக் கழகம் அமைக்க சென்னை அரசாங்கம் உடனே அனுமதி தருமா?"

என்று, தோழர் க. அன்பழகன் அவர்கள் கேட்டதற்கு, 'எல்லா பல்கலைக் கழகங்களிலும் தமிழை போதனாமொழியாக மாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்' என்று அமைச்சர் பதிலளித்தார்.

★

வளவனூரில் சர்க்கரை ஆலை?

ஏ. கோவிந்தசாமியின் கேள்விக்கு அமைச்சர் பதில்

தென்னாற்காடு மாவட்டம் கோழியனூரில் முதலில் பாரி கம்பெனியார் சர்க்கரை ஆலையை துவங்கத் திட்டமிட்டுப் பணம் வசூலித்து வந்தனர் என்றும் பிறகு அந்த முயற்சியை அவர்கள் கைவிட்டுவிட்டனர் என்றும், வளவனூரில் சர்க்கரை ஆலை ஆரம்பிக்க யாராவது முன்வந்தால் அரசாங்கம் அனுமதி அளிக்கும் என்று தொழில் அமைச்சர் ஆர் வெங்கட்ராமன், ஏ. கோவிந்தசாமி அவர்களின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

★

தமிழ் நாட்டில் சர்க்கரை ஆலைகள்

சர்க்கார் நிலைபற்றி தகவல்

சென்னை, ஜுன் 28—

சென்னை மாநிலத்தில் இப்போது நான்கு சர்க்கரை ஆலைகள் உள்ளனவாம்.

1955—56-ம் ஆண்டில் மொத்தம் 53,000 டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாம்.

இந்த ஆலைகள் நாள்தோறும் 4,300 டன் சர்க்கரைமட்டுமே உற்பத்தி செய்யும் திறன் உள்ளவையாம்.

புதிதாக 6 சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி தரப்பட்டுள்ளதாம்; திருச்சி, கோவை, வட ஆற்காடு, செங்கற்பட்டு, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் நிறுவப்படும் இந்த ஆலைகள் நாள் ஒன்றுக்கு 5,100 டன் சர்க்கரை உற்பத்தி செய்யும் திறன்பெற்றவையாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 2,400 டன் உற்பத்தி செய்யக்கூடிய 3 ஆலைகளுக்கு அனுமதி தரப்படுமாம்.

சர்க்கரை ஏற்றுமதிக்கான வரம்பை மத்திய அரசாங்கம் நிர்ணயித்துள்ளதாம். 25 இலட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

மாநிலங்களுக்கு ஏற்றுமதியை பற்றிய பொறுப்பு இல்லையாம்; இருப்பினும் 1,40,000 டன் உற்பத்தி செய்ய சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

இப்போது ஏற்றுமதி செய்ய சர்க்கரை அனுமதிக்கப்படுவதில்லை என்றும், அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு 31-12-57 வரை எவ்வளவு வெல்லம் வேண்டுமானாலும் தாராளமாக ஏற்றுமதி செய்யலாம் என்றும் சட்டசபையில் தொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

★

மதுரை ஆலை இயங்காதது ஏன்?

சர்க்கார் ஏதும் செய்வதற்கு இல்லை என்கிறார் அமைச்சர்

இயங்காது மூடப்பட்டுள்ள மதுரை ஆலையைக் குறித்து ஒரு அவசரப் பிரேரபணையை தோழர் பி. எஸ். சின்னதுரை கொண்டு வந்தார்.

அமைச்சர் ஆர். வெங்கடராமன் செய்துவைத்த உடன்பாட்டின்படி தொழிலாளர்கள் நடந்து கொள்ளவில்லை என்றும், வேலைப் பளுவை ஏற்றுக்கொள்ள தொழிலாளர்கள் சரிசெய்துகொள்ளும் வரையில் முதலாளிகள் காத்திருக்க விரும்பவில்லை என்றும், இந்த நிலையை மாற்றி அமைத்து மதுரை ஆலையை மீண்டும் இயங்கச் செய்வதில் சென்னை அரசாங்கம் ஒன்றும் செய்வதற்கில்லை என்றும், தொழிலாளர்களுக்கும்—முதலாளிகளுக்கும் சமரசம் ஏற்படும் என்று தான் நம்புவதாகவும் அமைச்சர் வெங்கடராமன் தெரிவித்தார்.

★

மணிமுத்தாறு திட்டத் தொழிலாளர்களுக்கு!

'வேறு வேலை தேடித் தரப்படுமா?'

க. அன்பழகன் கேள்வி

மணிமுத்தாறு அணைத் திட்ட வேலை பூர்த்தியடையும் கட்டத்தில் இருக்கிறது என்றும், இந்தத் திங்கள் இறுதியிலோ அல்லது அடுத்த திங்களிலோ அதில் தண்ணீர் விடுவதற்கு சர்க்கார் உத்தேசித்திருக்கிறது என்றும் மராமத்து அமைச்சர் கக்கன் சட்டசபையில் தெரிவித்தார்.

க. அன்பழகன் :—'இந்த மணிமுத்தாறு அணைத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வேறு வேலை தேடித் தரப்படுமா?'

அமைச்சர் :—'ஆம்'.

இந்த மணிமுத்தாறு அணைத் திட்டம் முடிந்தவுடன் 99,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியும், இதில் 79,000 ஏக்கர் நிலத்திற்கு நேரடி நீர்ப்பாசன வசதியும் கிடைக்கும் என்றும், 3 000 புஞ்சை நிலம் நஞ்சையாக மாற்றப்படும் என்றும், 13 000 ஏக்கர் நிலம் பாசனத்திற்கு உட்படுத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சிபாரிசுகளை ஏற்கவில்லையாம்!

ஸ்தலஸ்தாபன சீர்திருத்தம் பற்றி அமைச்சரவையின் நிலை

"ஸ்தல ஸ்தாபன சீர்திருத்தம் பற்றி திரு. இரத்தினசபாபதி முதலியார் குழு தெரிவித்த முடிவுகளை சென்னை அரசாங்கம் ஏற்கவில்லை"

என்று, ஸ்தலஸ்தாபன அமைச்சர் லூர்தம்மாள் சட்டசபையில் குறிப்பிட்டார்.

நகரசபையின் ஆணையாளர் பதவிகளை ரத்து செய்துவிட்டு நகரசபைத் தலைவரையே நிர்வாக அதிகாரியாக்கவேண்டுமென அக்குழு சிபாரிசு செய்திருந்தது.

இப்போது ஸ்தலஸ்தாபன அமைப்பை மாற்றியமைப்பது பற்றிய பிரச்சினையின் பல்வேறு அம்சங்களையும் அமைச்சரவையின் துணைக்குழு ஒன்று ஆராய்ந்து வருகிறதாம்.

★

'காமராசர்'புரத்திற்கு ரூ.-1,68,000 கடனுதவியாம்

சென்னை, ஜூன் 28—

சேலம் நகரசபை ஒரு காலனி அமைக்க முடிவு செய்து, அதற்கு சென்னை முதலமைச்சர் காமராசர் பெயரை சூட்ட முடிவு செய்து, நிதிவசதி பெற சென்னை அரசாங்கத்திடம் அணுகியதாம்.

இந்த 'காமராசர்' புரத்திற்கு சென்னை அரசாங்கம் ரூ. 1,68,000 கடனாகத் தந்துள்ளதாம். இந்தத் தொகையை சேலம் நகரசபை 30 ஆண்டுகளில் திரும்பத் தர வேண்டும்; இதற்கு 4½ சதவிகிதம் வட்டியும் வசூலிக்கப்படுமாம்.

இந்தத் தொகை, மாதம் ரூ 100-க்கு அதிகமாக வருமானம் இல்லாதவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தின்கீழ் தருவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாம்.

★

பட்டதாரிகளுக்கே அரசாங்க வேலையா?

குழுவின் சிபாரிசுகள் பரிசீலனை செய்யப்படுகிறதாம்

அரசாங்கத் துறையில் வேலை பெற பல்கலைக் கழகப் பட்டம் அவசியமா என்று பரிசீலனை செய்வதற்காக நியமிக்கப்பட்ட திரு. இராமசாமி முதலியார் குழுவின் சிபாரிசுகள் மத்திய-மாநில சர்க்கார்களால் பரிசீலனை செய்யப்பட்டு வருவதால் அது பற்றிய விவரங்களைத் தெரிவிக்க இயலாதென்று நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எல்லா உத்தியோகங்களுக்கும் பட்டப் படிப்பு அவசியமில்லையென்றும், எனினும் ஒரு பிரவேசப் பரீட்சை முறையை ஏற்படுத்தலாமென்றும் பொதுவாக அக்குழு சிபாரிசு செய்திருக்கிறதாம்.

★

குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாம்

ஏற்கமறுக்கும் அரிசி ஆலை அதிபர்கள் தண்டிக்கப்படுவராம்

அரிசி ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அதன்படி தொழிலாளர்களின் ஊதியம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் உத்திரவு பிறப்பித்திருக்கிறதாம்.

"இதனை ஏற்று அமுல் நடத்த மறுக்கும் அரிசி ஆலை அதிபர்களுக்கு தண்டனை விதிக்கப்படும்"

என்று, தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் தெரிவித்தார்.

★

கைத்தறி உற்பத்தி-தேக்கம்பற்றி அமைச்சர்

சென்னை, ஜுன் 28—

சென்னை மாநிலத்தில் 7-கோடியே 70 இலட்சம் கெசம் கைத்தறி துணி உற்பத்தியாகிறதாம்; இதில் 70 இலட்சம் கெசம் துணி மட்டுமே தற்போது கையிருப்பாக உள்ளதாம்!

சில குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே கைத்தறித் துணி தேங்கியுள்ளதாம்.

சர்க்கார் மருத்துவமனைகளில் இலஞ்ச ஊழல்!

விசாரணை செய்ய குழு நியமிப்பது பற்றி சர்க்கார் பரிசீலிக்கிறதாம்

சென்னை, ஜுன் 28—

சர்க்கார் மருத்துவமனைகளில் இலஞ்ச ஊழல் தாண்டவமாடுவதாகவும், இது குறித்து எழுப்பப்பட்டுள்ள புகார்களைப் பரிசீலித்து, இலஞ்ச ஊழல் பற்றி விசாரிக்கவுமாக சில மருத்துவ அதிகாரிகளையும், வேறு சில இலாகா அதிகாரிகளையும் கொண்ட ஒரு குழு நியமிப்பது குறித்து சர்க்கார் பரிசீலித்து வருகிறதாம்.

'சர்க்கார் மருத்துவமனைகளில் நிலவும் இலஞ்சப் பழக்கத்தைக் குறித்து விசாரணை நடத்துவதற்காக ஒரு உப குழு நியமிக்க வேண்டும்' என்று சட்டசபையின் மதிப்பீட்டு குழு முன்பே ஒரு யோசனை தெரிவித்திருக்கிறது என்றும் தெரியவருகிறது.

கழகக் கூட்டங்கள்

★

ஆண்டிப்பட்டிகோட்டை:

2—7—57 இரவு 7 மணிக்கு

தி. மு. கழகத் துவக்க விழா

தலைவர் :

டி. வி. எல்லப்ப(நாய்க்கர்)

பேசுவோர் :

ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.,
அன்பில்-தருமலிங்கம்
இரத்தினம்
எம். குழந்தைவேல்
எம். கே. கரிகாலன்
இரா. இராமலிங்கம்
எஸ். மல்லையன்

★

சென்னை 14-வதுவட்டம்

அண்ணா பிள்ளை தெருவில் (கொத்தவால்சாவடி அருகில்)

30—6—57 மாலை 6 மணிக்கு

தலைவர் :

கே. எஸ். இலட்சுமணன்

பேசுவோர் :

கி. மனோகரன்
கண்ணதாசன்
எஸ். எஸ். தென்னரசு
கோ. செங்குட்டுவன்
கா. இரகுநாதன்

ஈ. வெ. கி. சம்பத்

எம். பி., நிகழ்ச்சிகள்

2—7—57

மாலை 4 மணிக்கு :
ஆண்டிப்பட்டி கோட்டை ஊர்வலம் ;

மாலை 5 மணிக்கு :
ஆலமரத்துப்பட்டி தி. மு. கழகத்தில் கொடியேற்று விழா ;

மாலை 6 மணிக்கு :
ஜங்கால்பட்டி தி. மு. கழகத் துவக்க விழா ;

இரவு 7 மணிக்கு :
ஆண்டிப்பட்டி கோட்டை தி. மு. கழகத் துவக்க விழா பொதுக்கூட்டம்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

ஜுலை 1 : இராதநரசிம்மபுரம்
3 : பாடி (சென்னை)
7 : வேலூர்
12 : பள்ளப்பட்டி
13 : பழனி
14 : விருதுநகர்
16 : சாத்தனூர்
17 : ஙிளியனூர்
18, 19 : மாயூரம் பகுதிகள்
20 : செம்பனார்கோயில்
21 : மாயூரம்
22 : பரிபூரணநத்தம்
24 : பேட்டை (நெல்லை)
28 : தென்மாபட்டு
31 : 12-வது வட்டம் சென்னை

தில்லை-வில்லாளன்

சுற்றுப்பயணம்

ஜுலை 1 : சின்னக் கொசப்பள்ளம்
3 : மேட்டுநீரேத்தான்
காலை—திருமணம்
மாலை-பொதுக்கூட்டம்

வரி எதிர்ப்புக் கூட்டம்

1—7—57 மாலை 6 மணிக்கு, சென்னை—வண்ணை, உதயசூரியன் அறிவியல் மன்றச் சார்பில், வண்ணை—நாராயணப்ப நாய்க்கன் தோட்டத்தில் தோழர் மு. இராமையா தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும்; அதுபோது தோழர்கள், எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., ப. உ. சண்முகம் எம். எல். ஏ., என். சீவரத்தினம், வி. எஸ். கிருட்டிணன் ஆகியோர் பேசுவர்.

மாயூரம் நகர தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்களுக்கு:

30—6—57 இரவு 8½ மணிக்கு மாயூரம்—கூறைநாடு (சுந்தரம் திரையரங்கின்) அருகிலுள்ள கே. வி. கே. சாமி படிப்பகத்தில் மேற்படி செயற் குழுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சென்னை 35-வது வட்டம்

தோழமைக் கழகத் துவக்க விழா

29—6—57 மாலை 6 மணிக்கு சென்னை—கோடம்பாக்கம் அருகிலுள்ள விருகம்பாக்கம் 'கோல்டன் ஸ்டூடியோ' அருகில், தோழர் ஏ. எஸ். ஜேசுபாதம் அவர்கள் தலைமையில் மேற்படி கழகத் துவக்க விழா நடைபெறும்; தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ; பி. ஆர். கோகுலகிருட்டிணன், எஸ். எஸ். தென்னரசு ஆகியோர் பேசுவர்.

அ. இ. கிராம அஞ்சல் ஊழியர் மாநாடு

30—6—57 மாலை 5-மணிக்கு சென்னை-பார்க் டவுன், மெமோரியல் மண்டபத்தில் தோழர் கே. ஆர். சம்பந்தம் தலைமையில் மேற்படி மாநாடு நடைபெறும்; இந்தியப் பேரரசின் அஞ்சல் துறை அமைச்சர் இராஜ்பகதூர் திறப்புரையாற்றுவார். சென்னை மாநில தொழில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் அவர்களும், மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் பலரும் சொற்பொழிவாற்றுவர்.

வடக்கு மேட்டு ராசப்பட்டி

பகுத்தறிவு படிப்பக திறப்பு விழா

30—6—57 இரவு 7 மணிக்கு திண்டுக்கல்—வடக்கு மேட்டு ராசப்பட்டியில், தோழர் வெ. முருகாண்டி தலைமையில், மேற்படி படிப்பகத் திறப்பு விழாப் பொதுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது தோழர் முகதா திறப்புரையாற்றுவார். தோழர்கள் மதுரை எஸ். முத்து, எம். சி. பாண்டியன் ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுவது. ஆசிரியர் : இரா நெடுஞ்செழியன் எம்.ஏ.